பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**03 01 2026** **SATURDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. புத்த மதத்தின் பாரம்பரிய புனித தலங்களை பாதுகாக்கவும், மேம்படுத்தவும் மத்திய அரசு தொடர் நடவடிக்கை எடுத்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. வெனிசுலாவை ஆக்கிரமித்து, அந்நாட்டு அதிபரை கைது செய்திருப்பதாக அமெரிக்க அதிபர் திரு டோனல்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

3. தொழில்நுட்பத்தில் இந்தியா முன்னணி நாடாக திகழ்வதாக மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

4. **ECI Net** செயலியை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளை பதிவு செய்யலாம் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

5. தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான முதலாவது இளையோர் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் **302** ரன் என்ற இலக்கை இந்தியா நிர்ணயித்துள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>>

புத்த மதத்தின் பாரம்பரிய புனித தலங்களை பாதுகாக்கவும், மேம்படுத்தவும் மத்திய அரசு தொடர் நடவடிக்கை எடுத்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று கௌதம புத்தரின் புனித நினைவுச் சின்னங்கள் கொண்ட சர்வதேச கண்காட்சியை தொடங்கிவைத்து பேசிய அவர், 125 ஆண்டுகளுக்கு பிறகு புத்த மதத்தின் பாரம்பரியம் மீட்டெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

புத்தரின் நினைவுச் சின்னங்களை சர்வதேச சந்தையில் ஏலம் விடுவதை மத்திய அரசு உறுதியுடன் தடுத்து நிறுத்தியதாகவும் அவர் கூறினார்.

புத்தரின் புனித சின்னங்களை பாதுகாக்கும் கடமை மட்டுமின்றி, காலம் கடந்து நிற்கும் நாட்டின் பாரம்பரியத்தை கட்டிக்காப்பதும் அரசின் தலையாய கடமை என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

நாட்டின் தொன்மை சிறப்புமிக்க நாகரீகத்தையும், பண்பாட்டையும் விளக்கும் இந்த நினைவுச் சின்னங்கள் என்னென்றும் காக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்திய மண்ணிலிருந்து தோன்றிய கௌதம புத்தரின் மனிதாபிமானம் குறித்த விழிப்புணர்வும், ஞானமும் போற்றி பாதுகாக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

புத்தரின் போதனைகள் பாலி மொழியில் எழுதப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டிய பிரதமர், இம்மொழிக்கு செம்மொழி அந்தஸ்து வழங்கி பாதுகாக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

**Piprahwa** -வில் கண்டெடுக்கப்பட்ட புத்த மதத்தின் தொல்பொருட்கள் பகவான் புத்தரின் இளமை காலம் குறித்த தகவல்களை அளித்திருப்பதாகவும் திரு நரேந்திர மோடி கூறினார்.

இந்நிகழ்ச்சியில், மத்திய கலாச்சாரத்துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கலந்துகொண்டு பேசுகையில், பிரதமர் திரு நரேந்திர மோடி கலாச்சார பாரம்பரியத்தோடு இணைந்து பொருளாதார வளர்ச்சிக்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார்.

கலாச்சார பாரம்பரிய தொல்பொருட்கள் பாதுகாக்கப்படுவதோடு மட்டுமின்றி அங்கு கிடைத்த ஓலைச்சுவடிகள் கணினி மயமாக்கப்பட்டு வருவதாகவும் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறினார்.

<<<<<>>>>>>

வெனிசுலா அதிபர் திரு **Nicolas Maduro**-வையும், அவரது மனைவியையும் கைது செய்து வெளி நாட்டுக்கு கொண்டு சென்றுள்ளதாக அமெரிக்க அதிபர் திரு டோனல்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், வெனிசுலா மீது அமெரிக்கப் படையினர் வெற்றிகரமான தாக்குதல் நடத்தியதாக கூறியுள்ளார்.

அமெரிக்க சட்டப்படி இந்த தாக்குதல் நடத்தியதாக திரு டோனல்டு ட்ரம்ப் கூறியுள்ளார்.

இந்த தாக்குதலையடுத்து, வெனிசுலா தலைநகர் **Caracas**-ல் குண்டு முழக்கங்கள் கேட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, வெனிசுலாவில் அவசர நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக துணை அதிபர் திரு **Delcy Rodriguez** தெரிவித்துள்ளார்.

ஐ நா பாதுகாப்பு கவுன்சிலின் அவசர கூட்டம் நடத்த வேண்டும் என்று வெனிசுலா கேட்டுக்கொண்டுள்ளது.

இதனிடையே, அமெரிக்கா, வெனிசுலா மீது நடத்திய தாக்குதலுக்கு ரஷ்யா கண்டனம் தெரிவித்துள்ளது.

அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், அமெரிக்காவின் ஆயுத ஆக்கிரமிப்பை கண்டிப்பதாகவும், மேற்கொண்டு எவ்வித போர் நடவடிக்கையும் தொடரக்கூடாது என எச்சரிப்பதாகவும் கூறியுள்ளது.

இந்த தாக்குதலுக்கு அமெரிக்கா கூறும் காரணங்களை எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாது என்றும் அந்த செய்திக்குறிப்பில் ரஷ்யா தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>>

தொழில்நுட்பத்தில் இந்தியா முன்னணி நாடாக திகழ்வதாக மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற பஞ்ச பரிவர்த்தன் நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், 4-ஜி, 5-ஜி, செமி கண்டெக்டர், தொலைத்தொடர்பு சாதனங்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் நாடு முன்னேறி வருவதாக கூறினார்.

நமது உற்பத்தித் துறை வளர்ச்சியடைந்துள்ளதாக கூறிய அவர், அத்தியாவசியப் பொருட்களின் உற்பத்திக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

11 ஆண்டுகளுக்கு முன்னர் நாட்டில் 99 சதவீதம் கைபேசிகளும் இறக்குமதி செய்யப்பட்டு வந்ததாக கூறிய திரு அஷ்வினி வைஷ்ணவ், தற்போது 99 சதவீத கைபேசிகளும் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுவதாக பெருமிதம் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

ECI Net செயலியை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளை பதிவு செய்யலாம் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக, வரும் 10-ஆம் தேதிக்குள் இந்த செயலியில் கருத்துக்களை பதிவிடலாம் என்று அந்த ஆணையம் கூறியுள்ளது.

புதிய ECI Net செயலியில் வாக்காளர் சேவையை மேம்படுத்துவதுடன், வாக்குப்பதிவு சதவீத விவரங்கள், வேட்பாளர்கள் குறித்த தகவல் உள்ளிட்ட 40 செயலிகளை ஒருங்கிணைத்து இந்த புதிய செயலி உருவாக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளது.

இந்த செயலி பீகார் சட்டப்பேரவைத் தேர்தலின்போது வெற்றிகரமாக பயன்படுத்தப்பட்டதாகவும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

<<<<<>>>>>>

இனி, மத்திய அரசு கடந்த ஆண்டு படைத்த சாதனைகள் குறித்த தொகுப்பு.

**(Opening Tune — 20 Sec.)**

இதில் இன்று இடம்பெறுகிறது உலக அரங்கில் உயர்ந்துள்ள இந்தியாவின் நன்மதிப்பு.

***(Sound Byte — 2.20 Sec.)***

<<<<<>>>>>>

உடல் உறுப்பு தானத்தில் கர்நாடகா மூன்றாவது இடத்தில் உள்ளதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.

கடந்த ஆண்டில் 198 உடல் உறுப்புதானம் செய்யப்பட்டுள்ளதாக கர்நாடக அரசின் சுகாதாரத் துறை செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

உடல் உறுப்பு தானம் தொடர்பாக, மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வு நடவடிக்கைகளே இதற்கு காரணம் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

நேபாளில் இன்று நிலநடுக்கம் ஏற்பட்டது.

அது ரிக்டர் அளவில் நான்கு புள்ளி ஆறாக பதிவானது.

**Taplejung** மாவட்டத்தில் இன்று அதிகாலை இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

அப்பகுதியை சுற்றியுள்ள இதர மாவட்டங்களிலும் நில அதிர்வு உணரப்பட்டது.

<<<<<>>>>>>

***விளையாட்டுச் செய்திகள்***

தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான முதலாவது இளையோர் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் **302** ரன் என்ற இலக்கை இந்தியா நிர்ணயித்துள்ளது.

**Benoni-**யில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், **302** ரன் என்ற வெற்றி இலக்குடன் விளையாடும் தென்னாப்பிரிக்கா சற்றுமுன்வரை **17** ஓவரில் **3** விக்கெட் இழப்பிற்கு **92** ரன் எடுத்துள்ளது.

முதலில் விளையாடிய இந்தியா நிர்ணயிக்கப்பட்ட **50** ஓவரில் **301** ரன் எடுத்து ஆட்டமிழந்தது.

---------------------

நியூஸிலாந்துக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் பங்கேற்க உள்ள இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

சுப்மன் கில் தலைமையிலான இந்த அணியில் ரோஹித் சர்மா, விராட் கோலி, முகமது சிராஜ் உள்ளிட்ட **15** பேர் இடம்பெற்றுள்ளனர்.

இரு அணிகளுக்கு இடையேயான முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி வதோதராவில் வரும் **11**-ஆம் தேதி நடைபெறுகிறது.

**<<<<<END>>>>>**